# எழுதி வளர்ந்த இயக்கம்

**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

■ பேராசிரியர் சுப.வீரபாண்டியன்

29

## இரு பெரும் புரட்சியாளர்கள்!

**த**ந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் இந்தியாவில் வாழ்ந்தவர்கள். பெரியார் பிறந்து 12 ஆண்டுகளுக்குப் பிறகு அம்பேத்கர் பிறந்தார். பெரியார் இறப்பதற்கு 17 ஆண்டுகளுக்கு முன்பே அம்பேத்கர் இறந்து போய்விட்டார். பெரியாரின் வாழ்க்கை வட்டத்துக்குள் அம்பேத்கரின் வாழ்க்கை வட்டம் அடங்கும். என்றாலும், இருவரும் வெவ்வேறு மாநிலங்களில், வெவ்வேறு மொழிகளைத் தாய்மொழிகளாகக் கொண்டு, வெவ்வேறு சூழல்களில் வளர்ந்தவர்கள். ஆதலால், இருவருக்கும் இடையில் மிக நெருக்கமான, ஒன்றுபடுகிற மையப்புள்ளியும் உண்டு, வேறுபடுகிற இடங்களும் உண்டு.


ஆ.ராசா

இவ்விருத் தலைவர்களையும் ஒப்பிட்டு, தி.மு.கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, 2008- ஆம் ஆண்டு, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பெரியார் உயர் ஆய்வு மையத்தில், ஆற்றிய உரையின் எழுத்து வடிவம்தான், **‘பெரியாரும் அம்பேத்கரும் - இன்றைய பொருத்தப்பாடு’** என்னும் இச்சிறு நூல். 32 பக்கங்களை மட்டுமே கொண்டிருக்கும் இந்நூலை அரை மணி நேரத்தில் படித்து விடலாம். ஆனால், அது நம்மைப் பல மணி நேரம் சிந்திக்க வைக்கும் நூலாகும்!

இருவரையும் ஒப்பிடுதல் என்றால், அது தனிமனித ஒப்பீடு அன்று. அப்படிச் செய்வது, ஒருவரைப் பாராட்டி, இன்னொருவரைப் புண்படுத்துவதாகும் என்று இராசா, தன் உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டு விடுகிறார். இந்த ஒப்பீடு என்பது, இரு வேறு தலைவர்களின் மதிப்பீடுகளையும், அவர்கள் இணையும் மையப்புள்ளியின் தேவையையும் ஒப்பிடுவது, என்பதை அவர் விளக்குகின்றார்.

### ஒன்றாகவும் தனியாகவும்

இருவரும் வேறுபடும் இடங்களை முதலில் இராசா தன் உரையில் சுட்டிக்காட்டி விடுகிறார். இருவரும் எல்லா நிலைகளிலும், ஒரே புள்ளியில் நின்றவர்கள் என்று பொய்யாகப் புனைந்துரைக்கவில்லை. வேறுபட்ட இடங்களும் உண்டு என்பதை மறைக்க வேண்டிய தேவை இல்லை என்பதை அவர் உணர்ந்திருக்கிறார்.

பெரியார் தன் இறுதி நாள் வரையில், தனித் தமிழ்நாடு என்னும் கோரிக்கையை முன் வைத்தவர். ஆனால், இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்பதில் அம்பேத்கர் இறுதிவரையில் உறுதியாக இருந்தவர்.


தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு இடையில் சமத்துவம், சமூக நீதி என்பன பெரியாரின் கொள்கைகள். சாதியும், மதமும் மாநில எல்லைக் கோடுகளைக் கடந்தவை என்பதால், இந்தியா முழுவதும் ஒன்றாக இருக்கவேண்டும், ஒன்றாக மாற வேண்டும் என்று எண்ணியவர் அம்பேத்கர். மொழிப் பாகுபாட்டைவிட, சாதிய முரண்பாடு, கூர்மையானதும், உடனடியாகக் கவனம் கொள்ள வேண்டியதும் ஆகும் என்பது அம்பேத்கரின் கருத்து.

### ஒற்றுமை... ஒரே மாதிரி அல்ல!

அது மட்டுமின்றி, வலிமையான ஒன்றிய அரசு (*STRONG CENTRE*) தேவை என்பதையும் அம்பேத்கர் வலியுறுத்தினார். பாகிஸ்தான் பிரிவினையை ஒட்டி, அந்தக் கருத்து அன்றைய தேவை என அம்பேத்கர் எண்ணினார். ஆனால், மாநில சுயாட்சிக் கருத்தாக்கங்களுக்குத் தந்தையாக விளங்கியவர் பெரியார்.

இருப்பினும், ஒரே மொழி, ஒரே பண்பாடுதான் இந்தியா முழுவதும் இருக்க வேண்டும் என்ற கருத்தை அம்பேத்கர் ஏற்கவில்லை. எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று கருதினாரே தவிர, ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று எண்ணவில்லை. மேலும் ‘பாரத்’ என்கிற சொல்லையே அம்பேத்கர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. இதனை அவரே வெளிப்படுத்தி இருக்கிறார்.

“அரசமைப்புச் சட்டத்தில் இந்தியா அல்லது பாரத் என்று எழுதப்பட்டிருந்தாலும், அந்த ‘பாரத்’ என்கிற சொல் என் கருத்துக்கு எதிராகத் திணிக்கப்பட்ட ஒன்று (*‘THE WORD BHARAT WAS INSERTED AGAINST MY WILL’*)” என்கிறார் அவர்!




### தாராளவாதியும் துறவறவாதியும்

ஆத்திகம், நாத்திகம் என்ற கோட்பாட்டிலும் இருவருக்கும் இடையில் நுட்பமான வேறுபாடு உண்டு. தன்னை ஒரு கடவுள் மறுப்பாளராகவே என்றைக்கும் பெரியார் நிலை நிறுத்திக்கொண்டவர். தான் ஒரு நாத்திகன் என்பதைவிட, தாராளவாதி என்று சொல்வதே சரி என அவர் கூறியிருந்தாலும், கடவுள் மறுப்பாளராகவே அவர் வாழ்ந்திருக்கிறார். அந்தக் கொள்கையைத்தான் அவர் பரப்பி இருக்கிறார்!

ஆனால், அம்பேத்கரோ, தன்னை நாத்திகர் என்று எப்போதும் கூறிக் கொண்டதில்லை. கடவுள் பற்றிய சிந்தனையைவிட, மக்கள் பற்றிய சிந்தனைதான் உடனடி தேவை எனக் கருதியவர் அவர். இருப்பினும், வேதங்களில் இருந்தும், வேதங்கள் காட்டும் வழிமுறைகளில் இருந்தும், புத்தரைப் போலவும், குருநானக்கைப் போலவும் மக்கள் முழுவதுமாகத் தங்களைத் துண்டித்துக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார்!

**‘பாரத்’ என்கிற சொல்லையே அம்பேத்கர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை. இதனை அவரே வெளிப்படுத்தி இருக்கிறார்.**

### தொழிலாளர் பிரிவினை வேண்டாம்

பிறப்பின் அடிப்படையில், இந்து மதம் ஏற்படுத்தி வைத்திருக்கிற சாதிய ஏற்றத்தாழ்வை எதிர்ப்பதிலும், ஒழிக்க வேண்டும் என்பதிலும் இருவரும் ஒரே மாதிரியாக முனைப்பு காட்டியவர்கள். தொழில் பிரிவினை இருக்கலாம், ஆனால், தொழிலாளர்களுக்குள் பிரிவினை இருக்கக்கூடாது (*DIVISION OF LABOUR AND DIVISION OF LABOURERS*) என்பதே அவர்களின் கருத்து. இந்துமதம் ஏற்படுத்தியிருக்கிற சாதியப் பிரிவினை படிப்படியான சமத்துவ மின்மை (*GRADED IN EQUALITY*) என்னும் நுட்பமான செய்தியை அம்பேத்கர் வெளிப்படுத்துகிறார். அதைத்தான் பெரியாரும் கடுமையாகக் கண்டிக்கிறார்.

மிகக் கடுமையான கால கட்டத்தில், சாதி ஒழிப்பைத் தங்களின் முதன்மை நோக்கமாகக் கொண்டு போராடியவர்கள் என்பது இருவருக்கும் இடையில் காணப்படும் மிகப்பெரும் ஒற்றுமை! எனவே இருவரையும், இரு பெரும் தலைவர்கள் என்பதைக் காட்டிலும், இருவரும் சமூகப் புரட்சியாளர்கள் என்பதே சரியானது என்னும் கருத்தை, படிப்பவர்களிடம் ஊட்டக்கூடிய ஆற்றல் வாய்ந்ததாக இந்நூல் அமைந்துள்ளது!

**-வாசிப்போம்**

## திராவிட இயக்க இதழ்கள் - எழிலோவியம்



**செ**ன்னை மண்ணடி, மலையப்பன் தெருவிலிருந்து, ‘பாட்டரசர்’, ‘பாட்டறிஞர்’ என்ற அடைமொழிகளால் அழைக்கப்பட்ட ‘பண்ணுருட்டி பரமசிவன்’ என்பவரால் நடத்தப்பட்ட இதழ் ‘எழிலோவியம்’.

இது 1970-களில், மரபுக் கவிதைகளுக்காக நடத்தப்பட்ட மாத இதழாகும். இதழின் விலை 25 காசு. கவிதைகளின் வழியே திராவிட இயக்கச் சிந்தனைகளை மக்களிடையே எடுத்துச் சென்ற இதழாக இது இருந்திருக்கிறது. இதழின் அட்டையில் ஓவியமும் கவிதைகளும் அச்சிடப்பட்டுள்ளன.

பரமசிவன் அவர்கள், மரபுக் கவிதை நடையில், சிறார்களுக்கான பாடல்களையும் படைத்துள்ளார். அவற்றில் அறிவியல் தொடர்பான விஷயங்கள் அதிகம் தென்படுகின்றன.

கவிஞர் சுரதாவின் உற்றத் தோழரான பண்ணுருட்டி பரமசிவன், ‘சுரதா ஆயிரம்’ என்ற நூலை வெளியிட்டிருக்கிறார். மேலும் பண்ணுருட்டியில் ‘சுரதா கவிஞர் பேரவை’ என்ற அமைப்பையும் நடத்தினார்.

## நூலகத்தில் கோமியமும் சாணமும்!



**உ**ண்மையைத் திரிப்பது, வரலாற்றை இருட்டடிப்புச் செய்வது என்கிற வரிசையில், இப்போது ஒன்றிய பா.ஜ.க. அரசு கையிலெடுத்திருக்கும் விஷம்... அறிவுச் செயல்பாட்டை மாசுபடுத்துவது. நாடு முழுவதும் உள்ள நூலகங்களை, இந்திய அரசியலமைப்பு பொதுப் பட்டியலின் கீழ் கொண்டுவர ஒன்றிய அரசு திட்டமிடுகிறது.

தற்போது நூலகங்கள் மாநில அரசின் பட்டியலில் உள்ளன. ஒருவேளை இந்தத் திட்டத்தின் மூலம் நூலகங்கள் பொதுப் பட்டியலுக்குப் போனால், நூலகங்களின் செயல்பாட்டில் தலையிடவும், சங்பரிவார் சித்தாந்தத்தைப் பரப்பவுமான நடவடிக்கைகளை பா.ஜ.க. மேற்கொள்ளும். மேலும், ‘ராஜாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை’ போன்ற தேசிய நிறுவனங்களிடமிருந்து மாநில நூலகங்கள் மற்றும் தனிப்பட்ட நூலகங்களுக்கு வழங்கப்படும் நிதி மற்றும் மானியங்களை அவர்கள் இதன்மூலம் கட்டுப்படுத்தக் கூடும்.

இப்படி ஒரு சட்டம் இயற்றப்பட்டால், சங்பரிவார் சித்தாந்தத்தைப் பரப்பும் புத்தகங்களை வாங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஏற்கெனவே கல்வி பொதுப் பட்டியலில் இருப்பதால், அதை மாநிலப்பட்டியலுக்குக் கொண்டு வர, தமிழ்நாடு முயன்று வருகிறது. இந்நிலையில் நூலகங்கள் பொதுப் பட்டியலுக்குப் போனால், அறிவியல், பகுத்தறிவு, மதச்சார்பின்மை உள்ளிட்ட சிந்தனைகளுக்கு எல்லாம் சாவு மணி அடிக்க வேண்டியது வரும். அதை உணர்ந்த தென்னிந்திய மாநிலங்கள் எல்லாம் எதிர்க்கத் தொடங்கியுள்ளன. வடமாநிலங்கள் பற்றித்தான் கவலைகொள்ள வேண்டியிருக்கிறது!

சுதந்திர இந்தியாவில் நூலகங்கள் தொடர்பாகத் தனிச் சட்டம் இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது. ‘மெட்ராஸ் பொது நூலகச் சட்டம்’, பின்னர் ‘தமிழ்நாடு பொது நூலகச் சட்டம்’ என மறுபெயரிடப்பட்டது, இது 1948-ஆம் ஆண்டில் இந்தியாவின் சென்னை மாநிலத்தில் இயற்றப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் இயற்றப்பட்ட முதல் சட்டம் இதுவாகும்.

இதுகாறும் தமிழ்நாடு உட்பட இந்தியாவின் 19 மாநிலங்கள் தங்கள் மாநிலத்தில் நூலகச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளன. மாநிலங்களில் உள்ள நூலகங்களை அந்தந்த மாநில அரசுகளே எந்தவித தலையீடும் இல்லாமல் நிர்வகிக்க வேண்டும் என்பது மாநில அரசின் கடமை. அப்படியிருக்கும்போது, நாடு முழுவதும் உள்ள நூலகங்களை இந்திய அரசியலமைப்பின் பொதுப் பட்டியலின் கீழ்க் கொண்டுவரும் ஒன்றிய அரசின் திட்டம், அரசியல் சாசன சட்டத்துக்குப் புறம்பானது மட்டுமல்ல, மாநில கூட்டாட்சித் தத்தவத்துக்கு விடப்படும் நேரடி சவால் மற்றும் அத்துமீறல்.

## ::ப்ளாஷ்பேக்




இராமகிருட்டிணன்

### மிசா சந்திப்பு!

**1976**-ஆம் ஆண்டு மிசா நெருக்கடிகளை எல்லாம் பொருட்படுத்தாமல், அவரைச் சென்று சந்தித்த ஆயிரக் கணக்கான தொண்டர்களில் நானும் ஒருவன். மதுரையிலிருந்து கிளம்பி சென்னைக்குச் சென்று, பழங்களுடன் தலைவர் கலைஞரை கோபாலபுரம் இல்ல முதல் மாடியில் சென்று சந்தித்தேன். ‘எங்கே இருந்து வருகிறாய்’ என்று அக்கறையுடன் விசாரித்தார். அப்போது மதுரையிலிருந்ததால் ‘மதுரை அய்யா’ என்றேன். பிறகு புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எனது ஆசையைப் பூர்த்திச் செய்து வைத்தார். பின்னாட்களில் என் மகனுக்கு ‘அறிவழகன்’ என்றும் மகளுக்கு ‘மலர்க்கொடி’ என்றும் அவர் பெயர் சூட்டியது, என் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்று.


**-க.வை. இராமகிருட்டிணன், தலைமைக் கழகச் சொற்பொழிவாளர், காரைக்குடி, சிவகங்கை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம் இரட்டைக் குழல் துப்பாக்கி!

**1977-ஆம், ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் உரையாற்றினார். “மாநில சுயாட்சி கேளுங்கள், உங்களுக்குத் துணை நிற்கிறோம்” என்றும், “மொழிப் பிரச்சினையில் நேருவின் உறுதிமொழிகள் சட்டத்தில் இடம்பெற தீர்மானம் கொண்டு வாருங்கள்” என்றும் உரையாற்றினார். முதலமைச்சர் எம்.ஜி.ஆர் தனது உரையில், “மொழிக் கொள்கையில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி போல இருப்போம்” எனத் தெரிவித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 210




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131